**கவனிக்க.-** *2006.10.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1468 - 2006 ඔක්තෝබර් 20 වැනි සිකුරාදා - 2006.10.20

*1468 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 994 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 994 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 995 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஒற்றோபர் 27 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஒற்றோபர் 13 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

இலங்கை புகையிரதப் பகுதிக்கு வெல்டிங்கிற்கான வெல்டிங் உபகரணங்களை வழங்கி அவற்றைப் பொருத்தி, இயங்கச் செய்வதற்கான கேள்விகள்

தலைவர், கேள்விச் சபை, இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமைகம், த. பெ. 355, கொழும்பு 10, இலங்கையில் ட்ராக்ஷன் ஆமேச்சர்களை வெல்டிங் மூலம் இணைப்பதற்கான வெல்டிங் உபகரணங்களை வழங்கி, அவற்றைப் பெருத்தி இயங்கச் செய்வதற்கான கேள்விகள் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர் களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் தமது விலை மனுக்களை நேரடியாகவோ அல்லது அதிகாரத் தத்துவம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாகவும் சமர்ப்பிக்கலாம்.

2. கேள்விகள் 09.11.2006 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளப்பெறப்பட முடியாத கேள்விப் பணமாக ரூபா 2,500 அல்லது அதற்கு சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 07.11.2006 பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும். கேள்விப்பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. புகையிரதப் பொது முகாமையாளர் அலுவலகம், த. பெ. இல. 355, கொழும்பு 10, இலங்கையில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ 'தலைவர், திணைக்கள கேள்விச் சபை, இலங்கை புகையிரத சேவைகள், புகையிரத் தலைமையகம், த. பெ. இல. 355, கொழும்பு 10' இலங்கையிற் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. கேள்விப்பத்திர ஆவணங்களை எந்தவிதக் கட்டணமுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலனை செய்யலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர், புகையிரதக் களஞ்சியத் திணைக்களம், த. பெ. 1347, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2432044 அல்லது 94 (11) 2436818.

தொடர்பு இல.: எஸ். ஆர். எஸ்./எவ் 6520

தலைவர்,
கேள்விச் சபை,
இலங்கை புகையிரத சேவை.

10-306

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பாணந்துறை, 7 ஆம் குறுக்கு வீதியில், இல. 58 (பழைய இல. 26) இல் வசிக்கும் நில்மினி விஜேயசிங்க (திருமணத்திற்கு முன்) பீரிஸ் ஆகிய நான், பாணந்துறை, ஹொரண வீதி, இல. 35 இல் வசிக்கும் லிதமுலகே சாந்தினி சுவர்ணா பீரிஸ் என்பவருக்கு வழங்கப்பட்டதும், எனது அட்டோர்ணித் தத்துவக்காரராக நியமித்து ரமணி த சேரம் பிரசித்த நொத்தாரிசுவினால் தயாரிக்கப்பட்ட 2003.07.22 ஆந் திகதிய இல. 484 கொண்ட அட்டோர்ணித் தத்துவத்தை (என்னால் கொடுக்கப்பட்ட அட்டோர்ணி அதிகாரத்தை) இரத்துச் செய்வதாக இத்தால் எல் லோருக்கும் அறியத்தருகிறோம். மேலும் குறிப்பிட்ட அட்டோர்ணித் தத்துவத்தின்கீழ் இதன் பிறகு எனக்காக அவரால் செய்யப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பில்லை என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நில்மினி விஜேயசிங்க (திருமணத்திற்கு முன்) பீரிஸ்.

இல. 58, (பழைய இல. 26),
7 ஆவது குறுக்கு வீதி,
பாணந்துறை.

10-390

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்கள் யாவருக்கும் அறியத்தருவது யாதெனில், மாத்தளை பிரதான வீதி, இல. 192 இல் வசிக்கும் மீரா மொஹிதீன் கலீலுர் ரஹ்மான் அல்லது அஹமட் கலீலுர் ரஹ்மான் ஆகிய என்னால், மாத்தளை பிரசித்த நொத்தாரிஸ் வை. ஹனீபா அவர்களால் 2005.07.25 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 5184 என்ற அட்டோணி பத்திரத்தின் மூலம் மாத்தளை, பிரதான வீதி, இல. 192 இல் வசிக்கும் முஹமட் அப்துல் காதர் மீரா மொஹிதீன் அவர்கட்கு அளிக்கப்பட்ட அட்டோனிப் பத்திரத்தை இத்தால் ரத்துச் செய்து மீளப் பெறுகின்றேன்.

கலீலுர் ரஹ்மான்,
அல்லது
அ. க. ரஹ்மான்

2006.08.28.

10-391

## நொத்தாரீஸ் இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அறிவித்தல்

கண்டி மாவட்டம், ஹற்றன், வெலிஓயா மேல் பிரிவில் வசிக்கும் காளிமுத்து திருச்செல்வம் ஆகிய நான், கண்டி மாவட்டத்தில் தமிழ்மொழியில் நடவடிக்கை மேற்கொள்ளும் பிரசித்த நொத்தாரிஸ் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் 1 ஆம் அட்டவணையின் 'ஆ' பிரிவின் 2 ஆம் ஏற்பாட்டுக்கமைய பதிவாளர் நாயகத்திடம் கோருவதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

கா. திருச்செல்வம்.

2006, ஒற்றோபர் 05,

10-423

# ஏல விற்பனைகள்

**தேசிய சேமிப்பு வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்கீழான விற்பனை*

**தேசிய சேமிப்பு வங்கிக்குச் சொந்தமான ஆதனம் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளையின் மெதபற்று சீதவாக்கை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாதுக்க கிராமத்தில் அமைந்துள்ள 'கிரிவத்துடு வலந்த' என்றும் 'கிரிவத்துடுவ வத்த' என்றும் அழைக்கப்படும் காணியின் துண்டு 3கே என அடையாளமிடப்பட்டுள்ள 15 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள பெறுமதிமிக்க ஆதனத்தின் ஏல விற்பனை**

**ஆதனங்களின் விவரணம்.-** மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளையின் மெதபற்று பாதுக்கவாக உதவி அலுவலகம் சீதாவாக்கை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாதுக்கவில் அமைந்துள்ள கிரிவத்துடுவலந்த என்றும் "கிரிவத்துடுவ வத்த" என்றும் அழைக்கப்படும் காணியும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்கவினால் ஆக்கப்பட்ட 1995.10.05 திகதியிட்ட 697/1995 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு 3கே என அடையாளமிடப்பட்டதும் - வடக்கில் : துண்டு 3எல் ஐயும் ; கிழக்கில் : துண்டு 3ஜே ஐயும் ; தெற்கில் : துண்டு 4 ஐயும் ; மேற்கில் : பாதையையும் எல்லைகளாகக் கொண்டதும் 697/1995 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்திற்கமைய பதினைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணம் கொண்டதும் அவிசாவளை காணிப்பதிவகத்தில் என் 174/113 இல் பதிவு செய்யப்பட்டதுமான பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

சொல்லப்பட்ட 697/1955 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3எல் என அடையாளமிடப்பட்ட பாதை ஒதுக்கு மற்றும் சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட பாதை வழியைப் பாவிப்பதற்கான உரித்தும் உள்ளடங்கலாக.

*(இல. 102/20/02 திமுத்து உயன, முத்துஹேன, மீகொட, வட்டாரேகவைச் சேர்ந்த செல்வி சீதா யசோமா அமரசிங்கவினால் இவ்வாதனம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளது.)*

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** பாதுக்கைச் சந்தியிலிருந்து வலது பக்கம் திரும்பி ஹொரண வீதியூடாக உடமுல்ல சந்திவரை சென்று அங்கிருந்து இடது பக்கம் திரும்பி மலகல்ல வீதியில் உடுமுல்ல கோவில் வரை சென்று, கோவிலுக்கு முன்னால் உள்ள வீதியூடாகச் செல்லவும். 150 மீற்றர் தூரம் வரையிலும் பயணித்து இடது பக்கமாக அமைந்துள்ள ஆதனத்தை அடையவும்.

இவ்வாதனம் பகிரங்க ஏலமூலம் 2006, நவெம்பர் 8 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் விற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யப்படும் விதம்.-** ஏலத்தைப் பெற்ற கொள்வனவுக்காரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% (இருபத்தைந்து வீதம்) ;

(2) பிரதேச சபைக்கு வரியாகக் கொள்வனவு விலையின் 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரர் தரகாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 84,510 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 3,000.

கொள்வனவு விலையின் மிகுதி 75% விற்பனைத் தினத்திலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும் பெறுவதற்கு தொடர்புகொள்ள வேண்டியவர் :

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு 03.
தொலைபேசி இல. : 011-2576132.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசதுறை வங்கிகளுக்கான பட்டய ஏலதாரர் மற்றும் மதிப்பீட்டாளர், நீதிமன்ற ஆணையாளர்கள்

*நகர அலுவலகம் :*
55ஏ, தர்மபால மாவத்தை,
கொழும்பு 03
தொலைபேசி இல.: 011-2448526, 011-2441761
தொலைநகல் இல.: 011-2448526
மின் அஞ்சல் : sameera@sri.lanka.net

*தலைமை அலுவலகம் :*
24, டொரிங்டன் வீதி,
கண்டி
தொலைபேசி இல. : 081-2224371, 081-2227593
தொலைநகல் இல. : 081-2224371
மின் அஞ்சல் : sameera@diamond.lanka.net

10-378

## றுஹுஹுண அபிவிருத்தி வங்கி - எல்பிட்டிய கிளை

*1990 ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏலவிற்பனை**

*றுஹுஹுண அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ் குறிப்பிட்ட சொத்துக்கள் 2006.11.07 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.*

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே பென்தரை வலல்விட கோறளை எல்பிடிய பெலேன்தகொடயில் அமைந்துள்ள கஹம்பிலிய கொடவத்தேயின் இலக்கம் 4 என்ற துண்டினால் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 91, 92, 93 எனும் ஒன்றிணைக்கப்பட்ட துண்டு என்ற ஒரு றூட் இருபத்திரெண்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 22பே.) எனும் மிகப்பெரிய காணித்துண்டும் அதிலுள்ள அனைத்து பயிர்ச்செய்கை, கட்டிடங்கள், காணிக்கு போக்குவரத்து செய்யவும் உள்ள பாதைகள் இக்காணி உரிமையாளருக்கு உரிமையாகும்.

**மேலதிக விபரங்களுக்காக.**- 2006.05.11 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2006.07.03 ஆந் திகதிய "தினமின", "த ஐலன்ட்", "தினகரன்" போன்ற சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்குப் பிரவேசித்தல்.**- எல்பிடிய நகரத்திலிருந்து பிடுவல பஸ் வீதியாக மீ. 600 அளவு செல்ல இடப்பக்மாக உள்ள விஜய மாவத்தை குறுக்கு வீதியில் 400 மீற்றர் அளவு தூரம் செல்ல இப்பாதைக்கு எதிராக இடப்பக்மாக இக் காணி அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ் குறிப்பிட்டபடி கொள்வனவாளரினால் பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளரின் தரகு 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 உம்
(5) விற்பனைச் செலவும் வேறு செலவுகள் இருப்பின் அப்பணமும்,

கொள்வனவு விலையின் மீதி 90% க்கான பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை பம்புரன, அனகாரிக தர்மபால மாவத்தையிலுள்ள இலக்கம் 382 ஏ என்ற நிலையத்திலுள்ள றுஹுஹுண அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் சாதாரண அதிகாரிக்கு" செலுத்த வேண்டும்.

மேல் குறிப்பிட்டபடி 30 நாட்களுக்குள் செலுத்தாது விடின் மீண்டும் அப்பணத்தைச் செலுத்திய 10% க்கான பணத்தை செலுத்தாதுவிடவும், மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமைஉண்டு. உரிமைகோரும் ஒப்பினையையும், மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731

10-397/2

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்
## கட்டுகஸ்தோட்டை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**பகிரங்க ஏல விற்பனை**

**பாத்ததும்புர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கஹல்ல கிராமத்தில் நவயலாதென்ன புகையிரத நிலையத்திற்குமிகவும் கிட்டிய "கெப்பெடிமுதுனேஹேனேகும்புர" தற்போது "மேட்டுநிலம்" எனும் காணியில் பிரித்தெடுக்கப்படட காணித்துண்டும் அத்துடன் அதனுள்ளடங்கும் சகலவற்றுடன் ஏல விற்பனை**

**(விஸ்தீரணம் : 0ஏ.0றூ.22.72பே.)**

*இவ்வாதனம் அத்துகொரலகே தொன் பத்மசிரி ஹரிஸ்சந்திர என்பவர் கடப்பாடுடையவராகவும் அந்தனிதுர பிரிஷ்னி இரங்க சில்வா கடப்பாடுடையவராகவும் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கியினால் பெறப்பட்டதாகும்)*

இவ்வாதனம் 15.11.2006 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 03.11.2005 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 25.10.2005 ஆந் திகதிய லங்காதீப பத்திரிகையையும் 24.10.2005 ஆந் திகதிய "ஐலன்ட்", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கட்டுகஸ்தோட்டையிலிருந்து வத்தேகம பாதையில் புகையிரத கடவை பாதையை கடந்து சற்று தூரம் சென்று இடது பக்கமாக திரும்பி நவயாலதென்ன புகையிரத நிலையத்தை கடந்து சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் இடது பக்கமாக செங்கல் உற்பத்தி நிலையம் அமைந்துள்ளது. இதனருகில் உள்ள பாதையில் சற்று தூரம் சென்றால் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் தொகையில் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூரதிகார சபை வரியாக உள்ளூரதிகார சபைக்குச் செலுத்தப்படற்பாலதான 1% (ஒரு சதவீதம்) ;

(3) ஏலவிற்பனையாளரின் தரகாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம்) ;

(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2000 ;

(5) எழுதுவினைஞரினதும் கூவுநரினதும் கட்டணங்களாக ரூபா 500 ;

(6) சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி தலைமை அலுவலகத்தில் அல்லது கட்டுகஸ்தோட்டை கிளையில் வைப்பிலிடுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விவரங்களுக்கு :**

"முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட். இல. 172, மடவல பாதை கட்டுகஸ்தோட்டை" என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. : 081- 2499836, 081-2497910
பெக்ஸ் இல. : 081- 249876.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்களினதும் வர்த்தக வங்கிகளினதும்
ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏலவிற்பனையாளர்.
இல. 83/5, பாமலுவ வீதி, வட்டபுலுவ,
கண்டி.

தொலைபேசி இல. 081- 2211025, 071- 4213497, 071-4755974. 071-2755975
பெக்ஸ் இல. 081- 2211025.

10-426/7

---

**செலான் வங்கி லிமிடெட் - அம்பலன்கொட கிளை**

1990 ஆம் ஆண்டு வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4ஆம் இலக்க சட்டத்தின் (விசேட சரத்துக்கள்) 4ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**காணி ஆதனம் ஏலவிற்பனை**

**1. தென் மாகாணம் காலி மாவட்டம் வெல்லபொட பற்று மாதம்பையில் வில்லிகமயில் அமைந்துள்ள துண்டு இல. 3 இன் 3C என்னும் முப்பத்தி எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 38பே.) பரப்பளவு கொண்ட காணி மற்றும் அதில் உள்ள கட்டிடங்கள், மரம் செடி கொடிகள் அடங்களாக அனைத்தும் (அனுமதி பெற்ற நில அளவையாளர் டீ. பீ. ஏ. டீ சில்வா வினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இல. 5466 மற்றும் 1986 பெப்புருவரி 15 ஆந் திகதியுடையதும் காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் பாகம்/ பிரிவு சீ 649/ 244 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான காணி.)**

**2. தென் மாகாணம் காலி மாவட்டம் வெல்லபொட பற்று மாதம்பையில் வில்லிகமயில் அமைந்துள்ள காணி துண்டு இல. 03 இன் துண்டு 3D பட்டியவத்த எனும் ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 6பே.) பரப்பளவு கொண்ட காணி (அனுமதிபெற்ற நில அளவையாளர் டீ. பீ. ஏ. டி. சில்வாவினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இல. 5466 மற்றும் 1996 பெப்புருவரி 15 ஆந் திகதியுடையதும் காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் பாகம் / பிரிவு சீ 649/ 245 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.) காணியை சென்றடைவதற்கான பாதை வீதியை கடந்து செல்ல போக்குவரத்து செய்ய, தாண்டிச் செல்ல, தள்ளுவண்டி உட்பட அனைத்து வகையான மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்களை ஓட்டிச் செல்லும், உபயோகிக்கும் அதிகாரம் உரிமை தகைமைகள் அனைத்துக்குமாக உரிமை உண்டு.**

*(கடன்பட்டார் என்ற வகையில் அம்பலன்கொடையைச் சேர்ந்த இருகிரண புத்தக தொழிற்சாலை உரிமையாளர் றூபசிங்க இந்திரரத்ன சில்வா என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி லிமிடெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி.)*

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2006 நவெம்பர் 14 ஆந் திகதி ந. ப. 12.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.-** கொழும்பு கோட்டையில் இருந்து காலி வீதியூடாக அம்பலாங்கொடையைத் தாண்டி வெனமுள்ள சந்தி வரை சென்று 88 ஆம் கி. மீ. ஆம் கல்லுக்கருகில் இடது பக்கமாக வெனமுள்ள வீதியில் திரும்பி சுமார் 50 மீற்றர் வரை சென்று இடது பக்கமாகவுள்ள சொத்தை சென்றடையலாம்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 2006.07.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமாணி, மற்றும் 2006.07.17 ஆந் திகதி டெய்லி மிரர் மற்றும் லங்காதீப மற்றும் 2006.07.24 ஆந் திகதி வீரகேசரி நாளிதழ்களையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%), விற்பனைவரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/ 2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500/-, விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90%, விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிடெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3 காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிடெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) " இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி 2456284, 2456285, 2456263

துசித கருணாரத்ன (ச. நீ.)
அனுமதிபெற்ற ஏலதாரர்
நீதிமன்ற ஆணையாளரும்

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ
தொலைபேசி: 2696155, 2572940

10-430

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் விற்பனை செய்தல் தொடர்பான அறிவித்தல்

**சொத்து நிலமனை ஏல விற்பனை**

இலக்கம் 19, மடவல றோட், கட்டுகஸ்தோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. அப்துல் அசீஸ் மொஹமட் சுல்தான், மாத்தளை, தர்மபால மாவத்தை, இல. 89/1, என்னும் முகவரியில் அமைந்துள்ள என். என். சி. என்டர்பிரைசஸ் என்பதன் உரிமையாளர். இவ்வுரிமையாளரினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனம்

கடன் தொடர்பிலக்கம் - 714/2003

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 18.11.2005 ஆந் திகதிய இலக்கம் 1420 கொண்ட வர்த்தமானியிலும் 10.11.2005 ஆந் திகதி

தினமின, தினகரன், டெய்லி நியூஸ் ஆகிய புதினப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26ம் பிரிவின்கீழ் அறவிடக்கூடிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தும் நிலமனையும் இலக்கம் 24, றொறிங்ரன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன்-சமரவிக்ரம அவர்களால் 22.11.2006 ஆந் திகதி முற்பகல் 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென அறிவிக்கப் படுகின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை கிழக்கு, பள்ளேசிய பத்து, கும்புரேகம்மெத்தவில் அமைந்துள்ள, மாத்தளை உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ராஜசேகரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2003.08.28 ஆந் திகதிய இலக்கம் 5964 கொண்ட வரைபடத்தில் துண்டுகள் A, B எனக்காட்டப்பட்டுள்ள "சுதுகங்க வத்த" என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய, மேற்கூறிய வரைபடத்திற்கிணங்க வடக்கில் அதே தோட்டத்தின் மிகுதிப்பாகமும், கிழக்கில் பிரவேச மார்க்கமும், தெற்கில் அதே தோட்டத்தின் மிகுதிப்பாகமும், மேற்கில் தோட்டப்பாதையும் எல்லைகளாகக் கொண்ட, முழுவதுமாக ஐந்து ஏக்கர் ஒரு றூட் முப்பத்திநான்கு பேர்ச்சுகள் (5ஏ. 1 றூ. 34பே.) விஸ்தீரணமுடைய அருகருகே அமைந்துள்ள காணித்துண்டுகள் முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது மாத்தளை காணிப் பதிவகத்தில் சி. 226/212 B ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறியவாறு கும்புரேகம்மெத்தவில் அமைந்துள்ள மாத்தளை உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ராஜசேகரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2003.08.28 ஆந் திகதிய இலக்கம் 5965 கொண்ட வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள "சுதுகங்க வத்த" என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய, மேற்கூறிய வரைபடத்திற்கிணங்க, கிழக்கில் பிரவேச மார்க்கமும், தெற்கில் 8564ஏ இலக்க வரைபடத்தின் 5 ஆந் துண்டும், மேற்கில் றோட்டும், வட மேற்கில்: 8564ஏ இலக்க வரைபடத்தின் துண்டு 3 உம் எல்லைகளாகக் கொண்ட, ஐந்து ஏக்கர் ஒரு றூட் இருபது தசம் ஐந்து பேர்ச்சுகள் (5ஏ. 1றூ. 20.5பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது மாத்தளை காணிப்பதிவகத்தில் சி 226/ 214 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்கூறியவாறு கும்புரேகம்மெத்தவில் அமைந்துள்ள மாத்தளை உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ராஜசேகரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1992.12.01 ஆந் திகதிய இலக்கம் 2466 கொண்ட வரைபடத்தில் துண்டு 3ஏ எனக்காட்டப்பட்டுள்ள "சுதுகங்க வத்த" என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய, மேற்கூறிய வரைபடத்திற்கிணங்க, வடமேற்கில்: 8564ஆம் இலக்க வரைபடத்தின் 1,2 ஆந் துண்டுகளும், தென்-மேற்கில்: 1563ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணியும் தோட்டப்பாதையும், தென் கிழக்கில்: 8564ஆம் இலக்க வரைபடத்தின் 4ஆந் துண்டும், வடகிழக்கில்: றோட்டும் எல்லைகளாகக் கொண்ட மூன்று ஏக்கர் மூன்று ஏக்கர் மூன்று றூட் முப்பத்திமூன்று பேர்ச்சுகள் (3ஏ. 3றூ. 33பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது மாத்தளை காணிப்பதிவகத்தில் சி. 181/255 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. ஐ. டி. ஜே. கம்மன்பில,
பிரதான முகாமையாளர்,

இலங்கை வங்கி,
மேற்தரக்கிளை,
மாத்தளை.

10-448

---

**ஹற்றன் நாஷனல் வங்கி லிமிட்டெட்**
**பொலன்னறுவை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**பெறுமதிவாய்ந்த ஆதனம் ஏல விற்பனை**

**வடமேல் மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில் தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில் மெதபத்துவில் கதுருவெல கிழக்கு 186 இன் கிராமசேவை அலுவலர் பிரிவில் உள்ள கதுருவெலக் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் தலைமைய திபதியினால் தயாரிக்கப்பட்டு அவரது கட்டுக்காப்பில் வைத்திருக் கப்படும் 151இல் காணித்துண்டு 149 எனக் குறித்துக்காட்டப் பட்டதுமான காணித்துண்டு.**

**(பரப்பளவு : 0ஏ. 3றூ. 24பே.)**

ஹற்றன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்தினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ், குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006 நவெம்பர் 6 ஆந் திகதியன்று பி. ப. 2.00 மணிக்கு ஸ்தலத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

கடப்பாட்டாளராக சுலைமான் கலீல் ரஹுமான் என்பவரால் ஹற்றன் நாஷனல் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட மேலேயுள்ள ஆதனம், பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசுவான பீ. ஏ. பி. எஸ். ஹரிஸ்சந்திர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2002.03.13 ஆந் திகதிய 1460 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவைச் செய்வதற்குத் தவறியுள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2002 யூலை 05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2002 செத்தெம்பர் 05 ஆந் திகதிய “ஐலன்ட்” , “திவயின” ,மற்றும் “தினகரன்” பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையின் முடிவடைந்ததும் வெற்றியீட்டிய கொள்வனவுகாரர், காசாகப் பின்வரும் தொகைகளைச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் தொகையில் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூரதிகார சபை வரியாக உள்ளூரதிகார சபைக்குச் செலுத்தப்படற்பாலதான 1% (ஒரு சதவீதம்) ;

(3) ஏலவிற்பனையாளரின் தரகாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவுகள் ;

(5) எழுதுவினைஞரினதும் கூவுநரினதும் கட்டணங்களாக ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுகளின் கட்டணங்களாக ரூபா 2,000

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் ஹற்றன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

உரித்துறுதிகளும் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் பின்வருபவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம் :-

பிரதம முகாமையாளர் (கடன் மேற்பார்வையும் அறவீடுகளும்)
ஹற்றன் நாஷனல் வங்கி லிமிட்டெட்,
"எச். என். பீ. கோபுரங்கள்,"
இல. 479, ரீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு - 10
தொலைபேசி இல. : 011- 2661815, 2661816.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்களினதும் வர்த்தக வங்கிகளினதும்
ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, பொமலுவ வீதி, வட்டபுலுவ,
கண்டி.

தொலைபேசி இல. 081- 2211025, 071- 4213497, 071-4755974.
பெக்ஸ் இல. 081- 22110502.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-454/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.